هداية

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

1

## வாகனத்தில் அமர்ந்து நிய்யத் வைப்பதற்க்கு முன்

اَلْحَمْدُ لِلّٰهِ وَسُبْحَانَ اللّٰهِ وَاللّٰهُ أَكْبَرُ

**அல்ஹம்துலில்லாஹி,**
**வ ஸுப்ஹானல்லாஹி, வல்லாஹு அக்பர்**

**அனைத்துப் புகழும் அல்லாஹ்விற்கே .**

**அல்லாஹ் தூயவன்.**

**அல்லாஹ் மிகப்பெரியவன்.**

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 1551

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

2

**தமத்துஃ முறையில் ஹஜ் செய்பவர் முதலில் உம்ராவுக்கு மாத்திரம் இவ்வாறு உள்ளத்தால் நிய்யத்து வைத்து இவ்வாறு கூற வேண்டும்**

لَبَّيْكَ عُمْرَةً

**லப்பைக உம்ரதன்**

**உம்ராவிற்காக வந்துவிட்டேன்.**

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள். முஸ்லிம் 1216

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

3

## கிரான் முறையில் உம்ரா, மற்றும் ஹஜ்ஜுக்கு சேர்த்து நிய்யத்து வைப்பவர், சேர்த்து உள்ளத்தால் நிய்யத்து வைத்து இவ்வாறு கூற வேண்டும்

لَبَّيْكَ عُمْرَةً وَحَجًّا

லப்பை(க்)க  உம்ரதன் ஹஜ்ஜன்

உம்ராவையும் ஹஜ்ஜையும், சேர்த்து செய்வதற்காக வந்து விட்டேன்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2301

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

4

## இஃப்ராத் முறையில் ஹஜ்ஜுக்கு மாத்திரம் நிய்யத்து வைப்பவர், உள்ளத்தால் நிய்யத்து வைத்து இவ்வாறு கூற வேண்டும்

لَبَّيْكَ حَجًّا

லப்பை(க்)க ஹஜ்ஜன்

ஹஜ்ஜை செய்வதற்காக வந்து விட்டேன்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2301

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

5

**ஹஜ்ஜுடைய, உம்ராவுடைய அமல்களை தொடர்ந்து செய்ய முடியாமல் போகும் என பயப்படக்கூடியவர்கள் நிய்யத்து வைக்கும் போது கூற வேண்டியது.**

اللَّهُمَّ مَحِلِّي حَيْثُ حَبَسْتَنِي

அல்லாஹும்ம மஹில்லி ஹய்ஸு ஹபஸ்தனீ

இறைவா! நீ எந்த இடத்தில் (கிரியைகளைச் செய்ய முடியாதவாறு) என்னை தடுக்கிறாயோ அதுதான் நான் இஹ்ராமிருந்து விடுபடும் இடமாகும்.

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) அவர்கள் , முஸ்லிம் 2301

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

6

நபி (ஸல்) அவர்கள் ஒரு பழைய சேணத்தின் மீதும், நான்கு திர்ஹம்கள் அல்லது அதற்குக் கூடப் பெறாத மதிப்புள்ள ஒரு போர்வையுடனும் ஹஜ் செய்தார்கள். பின்னர் அவர்கள் கூறினார்கள்:

اللَّهُمَّ حِجَّةٌ لَا رِيَاءَ فِيهَا وَلَا سُمْعَةَ

அல்லாஹும்ம ஹிஜ்ஜ(த்)துன் லா ரியாஅ பீ(ஃ)ஹா வலா ஸும்அஹ்

யா அல்லாஹ்! இது எந்தவிதமான பகட்டும் புகழும் தேடப்படாத ஹஜ்ஜாக அமையட்டும் எனப் பிரார்த்தித்தார்கள்

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், இப்னுமாஜா 2890

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

7-A

ஹஜ்ஜுக்கும், உம்ராவுக்கும் நிய்யத்து வைத்தது முதல் தவாஃபை ஆரம்பிக்கும் வரை தல்பிய்யா கூற வேண்டும். பிறகு துல்ஹஜ் பிறை 8ல் ஹஜ்ஜுக்குரிய வணக்கங்களை ஆரம்பித்தது முதல் பிறை 10ல் இறுதியாக உள்ள ஜம்ராவில் கல்லெறியும் வரை தல்பிய்யா கூற வேண்டும்

لَبَّيْكَ اللّٰهُمَّ لَبَّيْكَ ، لَبَّيْكَ لا شَرِيكَ لَكَ لَبَّيْكَ ،

إِنَّ الحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالمُلْكَ ، لَا شَرِيكَ لَكَ

லப்பைக், அல்லாஹும்ம லப்பைக்.
லப்பைக், லா ஷரீக லக லப்பைக். இன்னல் ஹம்த வந்நிஃமத லக, வல்முல்க, லா ஷரீக்க லக்

இதோ, உன் அழைப்பை ஏற்று வந்துவிட்டேன்! இறைவா! உனக்கே நான் கீழ்ப்படிகிறேன்! உனக்கு இணை துணை கிடையாது. எல்லாப் புகழும் அருட்கொடையும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு இணையானவர் யாருமில்லை.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், புஹாரி 1549

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

7-B

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்

தமது தல்பியாவில் (கூறும் பொழுது),

لَبَّيْكَ إِلَهَ الْحَقِّ لَبَّيْكَ

லப்பைக் இலாஹல் ஹக், லப்பைக்

சத்தியத்தின் இறைவா!

இதோ நான் வந்துவிட்டேன்!

இதோ நான் வந்துவிட்டேன்!

என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், இப்னுமாஜா 2920

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

7-C

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்து, 'ஓ முஹம்மத் (ஸல்) அவர்களே! உங்கள் தோழர்கள் (ஹஜ்ஜின் போது) தல்பியா ஓதும்போது தங்கள் குரல்களை உயர்த்துமாறு அவர்களிடம் கூறுங்கள், ஏனெனில் அது ஹஜ்ஜின் சின்னங்களில் ஒன்றாகும்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஸைத் பின் காலித் அல்ஜுஹனீ(ரலி) அவர்கள், இப்னுமாஜா 2923

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

8

## புனித ஹரம் மஸ்ஜிதுக்குள் நுழையும் போது வலது காலை முன் வைத்து

اللَّهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

அல்லாஹும்மஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக

யா அல்லாஹ்! உனது அருள்வாயில்களை எனக்கு திறந்து விடுவாயாக!

அறிவிப்பவர்: அபூ ஹுமைத் (ரலி) அவர்கள். முஸ்லிம் 713

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

9

## ஹஜருல் அஸ்வத்திலிருந்து தவாஃபை ஆரம்பிக்கும் போதும், ஒவ்வொரு சுற்றை ஆரம்பிக்கும் போதும் அல்லாஹு அக்பர் எனக் கூறுவது

اللهُ أَكْبَرُ

**அல்லாஹு அக்பர்**

**அல்லாஹ் மிகப் பெரியவன்**

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 1613

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

10

## ருக்னுல் யமானிக்கும், ஹஜருல் அஸ்வதுக்கும் மத்தியில்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ

ரப்பனா ஆ(த்)தினா ஃபித்துன்யா ஹஸனவ் வஃபில் ஆஹிர(த்)தி ஹஸனதவ் வகினா அதாபன்னார்

எங்கள் இறைவனே! எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக! மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக! இன்னும் எங்களை (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக!

அல்குர்ஆன் 2:201, அபூதாவுத் 1892

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 11

## தவாஃபை முடித்த பிறகு தொழும் 2 ரக்அத்துகளில் ஓத வேண்டியவை

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மகாமு இப்ராஹீமை (இப்ராஹீம் (அலை) நின்ற இடத்தை) அடைந்தபோது, “வத்தகிது மின் மகாமி இப்ராஹீம முஸல்லா” (இப்ராஹீம் (அலை) நின்ற இடத்தை தொழும் இடமாக நீங்கள் ஆக்கிக்கொள்ளுங்கள்) என்று ஓதினார்கள். பிறகு அவர்கள் இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள். அதில் அல்-ஃபாத்திஹாவையும், “குல் யா அய்யுஹல் காஃபிரூன்” மற்றும் “குல் ஹுவல்லாஹு அஹத்” ஆகியவற்றையும் ஓதினார்கள்.

பிறகு அவர்கள் (ஹஜருல் அஸ்வத் உள்ள) மூலைக்குத் திரும்பிச் சென்று அதைத் தொட்டார்கள் (இஸ்திலாம் செய்தார்கள் - முத்தமிட்டார்கள் அல்லது கையால் தொட்டு முத்தமிட்டார்கள்). பின்னர் ஸஃபா (மலை) நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், நஸாயீ 2963

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

12

## ஸஃயி செய்வதற்காக ஸஃபா மலையை நெருங்கியதும் ஓத வேண்டிய அல்குர்ஆனின் வாக்கியம்

إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِن شَعَائِرِ اللَّهِ

**இன்னஸ் ஸஃபா வல் மர்வத மின் ஷஆஇரில்லாஹ்**

**நிச்சயமாக 'ஸஃபா', 'மர்வா' (என்னும் மலைகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் நின்றும் உள்ளன**

குறிப்பு: இந்த வாக்கியத்தை முதலில் மட்டுமே ஒரு முறை ஓத வேண்டும். ஏனைய சுற்றுகளில் கிடையாது.

அல்குர்ஆன் 2: 158, முஸ்லிம் 2137

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஓத வேண்டியவை

13

ஸஃபாவில் ஏறி கிப்லாவை முன்னோக்கி கீழுள்ள திக்ரை மூன்று முறைக் கூறுவது. அவற்றுக்கிடையில் மூன்று முறையும்பிரார்த்திப்பது. அனைத்து சுற்றுக்களிலும் ஸஃபாவிலும், மர்வாவிலும்இவ்வாறே செய்வது.

اللهُ أكبر ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ
وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ أَنْجَزَ وَعْدَهُ،
وَنَصَرَ عَبْدَهُ، وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்.
லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக லஹு, லஹுல் முல்க்கு, வ லஹுல் ஹம்து. வ ஹுவ அலா குல்லி ஷையின் கதீர்.
லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு, அன்ஜஸ வஃதஹு, வ நஸர அப்தஹு. வ ஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹ்

அல்லாஹ் மிகப்பெரியவன். அல்லாஹ் மிகப்பெரியவன். அல்லாஹ் மிகப்பெரியவன்.
அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையாக எவரும் இல்லை. அவனுக்கே ஆட்சியதிகாரம் உரியது. அவனுக்கே புகழனைத்தும். அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் படைத் தவன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றித் தந்தான். தன் அடியாருக்கு உதவி செய்துவிட்டான். தன்னந்தனியாக கூட்டணிக்குலங்கள் அனைத்தையும் தோற்கடித்துவிட்டான்.

முஸ்லிம் 1218

# ஹஜ்ஜிலும், உம்ராவிலும் ஒத வேண்டியவை

14

## மஸ்ஜிதிலிருந்து வெளியேறும் போது

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ

அல்லாஹும்ம இன்னீ அஸஅலுக
மின் ஃபழ்லிக

யா அல்லாஹ்! நான் உன்னிடம் உன்
அருளிலிருந்து கேட்கிறேன்.

அறிவிப்பவர்: அபூ ஹுமைத் (ரலி) அவர்கள், முஸ்லிம் 713

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 15

**தமத்துஃ முறையில் ஹஜ் செய்பவர் துல்ஹஜ் பிறை 8ல் சூரிய உதயத்திற்குப் பிறகு முஹருக்கு முன் அவர் இருக்குமிடத்தில் ஹஜ்ஜுக்கு நிய்யத்து வைத்து இவ்வாறு கூற வேண்டும்**

لَبَّيْكَ حَجًّا

லப்பை(க்)க ஹஜ்ஜன்

ஹஜ்ஜை செய்வதற்காக வந்து விட்டேன்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2301

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 16

**பிறை 8ல் ஹஜ்ஜுக்கு நிய்யத்து வைத்தது முதல் 10வது நாள் முதல் ஜம்ராவில் கல்லெறியும் வரை தல்பிய்யா கூற வேண்டும்.**

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ ، لَبَّيْكَ لا شَرِيكَ لَكَ لَبَّيْكَ ،
إِنَّ الحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالمُلْكَ ، لَا شَرِيكَ لَكَ

லப்பைக், அல்லாஹும்ம லப்பைக். லப்பைக், லா ஷரீக லக லப்பைக். இன்னல் ஹம்த வந்நிஃமத லக, வல்முல்க, லா ஷரீக்க லக்

இதோ, உன் அழைப்பை ஏற்று வந்துவிட்டேன்! இறைவா! உனக்கே நான் கீழ்ப்படிகிறேன்! உனக்கு இணை துணை கிடையாது. எல்லாப் புகழும் அருட்கொடையும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு இணையானவர் யாருமில்லை.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், புஹாரி 1549

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 17

**முஹம்மத் பின் அபீபக்ர் அஸ்ஸகஃபீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது.**

நானும் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களும் மினாவிலிருந்து அரஃபாவுக்குப் போகும்போது அனஸ் (ரலி) அவர்களிடம், "நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தபோது இன்றைய (அரஃபா) நாள் என்ன செய்தீர்கள்?" எனக் கேட்டேன்.

அதற்கு, "அன்று எங்களில் சிலர் தல்பியா கூறிக் கொண்டிருந்தனர், அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்படவில்லை. வேறு சிலர் தக்பீர் கூறினார்கள், அதற்கும் ஆட்சேபம் தெரிவிக்கப்படவில்லை" என அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

**புகாரி 1659**

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 18

اللَّهُ أَكْبَرُ لَا إِلَهَ إِلَّا اللَّهُ

**அல்லாஹு அக்பர்**
**லா இலாஹ இல்லல்லாஹ்**

அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவரும் இல்லை

"நாங்கள் அரஃபா (தினத்தின்) காலையில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தோம்.

எங்களில் தக்பீர் (அல்லாஹு அக்பர்) கூறுபவரும் இருந்தார், தஹ்லீல் (லா இலாஹ இல்லல்லாஹ்) கூறுபவரும் இருந்தார். (அப்போது) நாங்கள் தக்பீர் கூறிக் கொண்டிருந்தோம்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1284

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 19

لَبَّيْكَ اللّٰهُمَّ لَبَّيْكَ،
اللّٰهُمَّ لَا خَيْرَ إِلَّا خَيْرُ الْآخِرَةِ

லப்பை(க்)க அல்லாஹும்ம லப்பைக்
அல்லாஹும்ம லா கை(ڂ)ர இல்லா
கை(ڂ)ரல் ஆகி(ڂ)ரா

நபி (ஸல்) அவர்கள் அரஃபாவிலிருந்த போது

"லப்பைக்க அல்லாஹும்ம லப்பைக்"
எனக் கூறி இறைவா ! மறுமையைத் தவிர
எந்த நலவுமில்லை எனக் கூறுபவர்களாக
இருந்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், இப்னு ஹுஸைமா 2831

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 20

**அம்ர் இப்னு ஷுஐப் அவர்கள் தனது தந்தை வாயிலாக, தனது பாட்டனாரிடமிருந்து அறிவித்தார்கள்.**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"பிரார்த்தனைகளிலேயே சிறந்தது அரஃபா நாளின் பிரார்த்தனை ஆகும்.

لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ،
وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

லா இலாஹ இல்லல்லாஹ், வஹ்தஹூ லா ஷரீக்க லஹூ, லஹூல் முல்கு வ லஹூல் ஹம்து, வ ஹுவ அலா குல்லி ஷையின் கதீர்

மேலும் நானும் எனக்கு முன் இருந்த நபிமார்களும் (அலைஹிஸ்ஸலாம்) கூறியவற்றில் சிறந்தது " வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை, அவனுக்கே அனைத்து ஆட்சியும் உரியது, அவனுக்கே எல்லாப் புகழும் உரியது, மேலும் அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுள்ளவன்"

குறிப்பு: அஷ்ஷைக் அல்பானி ரஹிமஹுல்லாஹ் இதை ஹஸன் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

**திர்மிதி 3585**

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 21

اللَّهُ أَكْبَرُ

لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ

அஷ்அத் பின் சுலைம் அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவித்தார்கள்.

நான் இப்னு உமர் (ரழி) அவர்களுடன் அரஃபாவிலிருந்து முஸ்தலிஃபாவை நோக்கிச் சென்றேன்.

நாங்கள் முஸ்தலிஃபாவை அடையும் வரை, அவர்கள் தக்பீர் (அல்லாஹு அக்பர்) மற்றும் தஹ்லீல் (லா இலாஹ இல்லல்லாஹ்) கூறுவதை நிறுத்தவில்லை.

அபூதாவூத் 1933

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 22

لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ اَنْ تَبْتَغُوْا فَضْلًا مِّنْ رَّبِّكُمْ ؕ
فَاِذَاۤ اَفَضْتُمْ مِّنْ عَرَفٰتٍ فَاذْكُرُوا اللّٰهَ عِنْدَ الْمَشْعَرِ
الْحَرَامِ ۖ وَاذْكُرُوْهُ كَمَا هَدٰٮكُمْ ۚ وَاِنْ كُنْتُمْ مِّنْ قَبْلِهٖ
لَمِنَ الضَّآلِّيْنَ

(ஹஜ்ஜ¬ பயணத்தின்போது) நீங்கள் (தொழில் செய்து) உங்கள் இறைவனுடைய அருளை(க் கொண்டு கிடைக்கும் லாபத்தை)த் தேடிக் கொள்வது உங்கள் மீது குற்றமாகாது. (ஹஜ்ஜ¬க்குச் சென்ற) நீங்கள் அரஃபாவிலிருந்து திரும்பினால் "மஷ்அருல் ஹராம்"என்னும் இடத்தில் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். நீங்கள் இதற்கு முன் வழி தவறியவர்களாக இருந்தபொழுது உங்களுக்கு அவன் நேரான வழியை அறிவித்ததற்காக மேலும், அவனை "திக்ரு" செய்யுங்கள்

**அல்குர்ஆன் 2: 198**

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 23

## முஸ்தலிபாவில் தல்பிய்யா கூறுதல்

அப்துர் ரஹ்மான் பின் யஸீத் அவர்கள் கூறினார்கள்.

"நாங்கள் ஜம்உவில் (முஸ்தலிஃபாவில்) இருந்த போது, இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறினார்கள்.

'சூரா அல்-பகரா யாருக்கு அருளப் பெற்றதோ அவர்கள் (ஸல்), இந்த இடத்தில் "லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்" என்று கூறுவதை நான் கேட்டேன்'.

நஸாஈ 3046

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 24

## முஜ்தலிபாவில் ஃபஜ்ருக்குப் பிறகு ஓத வேண்டியவை

اَللّٰهُ أَكْبَرُ

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ

பிறகு கஸ்வா ஒட்டகத்தில் ஏறி 'மஷ்அருல் ஹராம்' இடத்திற்கு வந்தார்கள். கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். அவனைப் பெருமைப்படுத்தினார்கள். ஏகத்துவத்தை மொழிந்தார்கள். நன்கு விடியும் வரை அங்கேயே நின்றார்கள். சூரியன் உதிப்பதற்கு முன்பே அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1218

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 25

ثُمَّ اَفِيۡضُوۡا مِنۡ حَيۡثُ اَفَاضَ النَّاسُ

وَاسۡتَغۡفِرُوا اللّٰهَ ‌ؕ اِنَّ اللّٰهَ غَفُوۡرٌ رَّحِيۡمٌ

பின்னர் மனிதர்கள் திரும்புகின்ற ("முஸ்தலிபா" என்னும்) இடத்திலிருந்து நீங்களும் ("மினா"வுக்குத்) திரும்பி விடுங்கள். மேலும், அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மகா கருணையாளன் ஆவான்.

அல்குர்ஆன் 2: 199

## தல்பிய்யாவை எப்போது நிறுத்துவது?

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (பெருநாள் தினத்தில்) ஜம்ரத் (அல்-அகபா) மீது கல்லெறியும் வரை தல்பியா கூறினார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், நஸாஈ 3056

## கல்லெறியும் போது தக்பீர் கூறுதல்

اللَّهُ أَكْبَرُ

பத்தாவது நாள் இறுதியாக உள்ள ஜம்ராவில் கல்லெறிதல்.

"அங்கு சிறு கற்கள் (சுண்டு விரலால்) எறியும் அளவுக்குச் சிறிய ஏழு கற்களை எறிந்தார்கள்.

ஒவ்வொரு கல்லையும் எறியும்போது தக்பீர் (அல்லாஹு அக்பர்) கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1218

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 28

**11,12,13 ஆகிய தஷ்ரீகுடைய நாட்களில் மூன்று ஜம்ராக்களிலும் கல்லெறியும் பொது தக்பீர் கூறல்**

சாலிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

اَللّٰهُ أَكْبَرُ

இப்னு உமர் (ரலி) அவர்கள் முதல் ஜம்ராவில் ஏழு கற்களை எறிவார்கள். ஒவ்வொன்றையும் எறிந்ததும் தக்பீர் கூறுவார்கள்.

பிறகு முன்னேறி சமதளப் பகுதிக்கு வந்து கிப்லாவை முன்னோக்கிக் கைகளை உயர்த்தி, நீண்ட நேரம் நின்று பிரார்த்திப்பார்கள்.

பின்பு இரண்டாவது ஜம்ராவில் அவ்வாறே கல்லெறிவார்கள். பிறகு இடப் பக்கமாக நகர்ந்து, சமதளப் பகுதிக்குப் போய் கிப்லாவை முன்னோக்கி நீண்ட நேரம் நின்றுகொண்டு கைகளை உயர்த்திப் பிரார்த்திப்பார்கள்.

பின்பு ''பத்னுல் வாதி' பள்ளத்திலிருந்து, கடைசி ஜம்ராவில் கல்லெறிவார்கள். அங்கு நிற்கமாட்டார்கள், பிறகு திரும்பிவிடுவார்கள். “இவ்வாறுதான் நபி (ஸல்) அவர்கள் செய்ய நான் பார்த்திருக்கிறேன் எனக் கூறுவார்கள்.

**புகாரி 1752**

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 29

## குர்பானிப் பிராணியை அறுத்துப் பலியிடும் போது கூற வேண்டியது

بِسْمِ اللَّهِ

اللَّهُ أَكْبَرُ

நபி (ஸல்) அவர்கள் கொம்பு உள்ள இரு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்களைக் குர்பானி கொடுத்தார்கள்.

அவ்விரண்டையும் தமது கரத்தால் அறுத்தார்கள். (அப்போது) அல்லாஹ்வின் பெயர் (பிஸ்மில்லாஹ்) கூறினார்கள். தக்பீரும் (அல்லாஹு அக்பர்) சொன்னார்கள். மேலும், தமது காலை அவற்றின் பக்கவாட்டில் வைத்(துக்கொண்டு அறுத்)தார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5565

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 30

## குர்பானிப் பிராணியை அறுத்துப் பலியிடும் போது கூற வேண்டியது

اللَّهُمَّ تَقَبَّلْهُ مِنِّي

அல்லாஹும்ம தகப்பல்ஹு மின்னீ

யா அல்லாஹ்! என்னிடம் இருந்து இதை ஒப்புக் கொள்வாயாக!

முஸ்லிம் 1967

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 31

ஹஜ்ஜுக்குரிய தவாஃப், ஸயீ,
தவாஃபுல்  விதா ஆகியவற்றில்
ஓத வேண்டியவைகளை இதே
தொகுப்பில் 9, 10, 11, 12 ஆகிய
எண்களிலுள்ள படங்களைப்
பார்த்து ஓதிக் கொள்ளவும்

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 32

## தஷ்ரீகுடைய (மினாவுடைய) நாட்களில் அல்லாஹ்வை அதிகம் திக்ரு செய்தல்

وَاذْكُرُوا اللّٰهَ فِىْٓ اَيَّامٍ مَّعْدُوْدٰتٍ

குறிப்பிடப்பட்ட நாட்களில் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள்.

குறிப்பு :

இந்த வசனத்திற்கு இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் விளக்கமளிக்கும் போது துல் ஹஜ் பிறை 10,11,12,13 ஆகிய நாட்களையை இது குறிக்கும் என்று கூறினார்கள்.

அல்குர்ஆன் 2:203

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 33

## துல்ஹஜ் பிறை 11,12, 13 ஆகிய நாட்கள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"அய்யாமுத் தஷ்ரீக்" (எனும் ஹஜ்ஜுப் பெருநாளுக்கு அடுத்த மூன்று) நாட்கள், உண்பதற்கும் பருகுவதற்கும், மேலும் இறைவனை நினைவுகூர்(ந்து திக்ர் செய்)வதற்கும் உரிய நாட்களாகும்.

அறிவிப்பாளர்: நுபைஷா பின் அம்ர் பின் அவ்ஃப் அல்ஹுதலீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 2099

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 34

## மினாவுடைய நாட்களில் அதிகம் தக்பீர் கூறுதல்

اللَّهُ أَكْبَرُ

உமர் (ரலி) அவர்கள், மினாவில் (தங்கி யிருக்கும் நாட்களில்) தமது கூடாரத்திலிருந்தபடி தக்பீர் கூறுவார்கள். அதைக் கேட்டு பள்ளிவாசலில் உள்ளவர்களும் தக்பீர் கூறுவார்கள். கடைவீதிகளில் உள்ளவர்களும் தக்பீர் கூறுவார்கள். எந்த அளவுக்கு என்றால் தக்பீர் முழக்கத்தால் ''மினா'வே அதிரும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள், மினாவில் இந்த நாட்களில் தக்பீர் கூறுவார்கள். தொழுகைகளுக்குப் பிறகும், தமது படுக்கையில் இருக்கும் போதும், தமது கூடாரத்தில் இருக்கும் போதும், அமரும்போதும், நடக்கும் போதும், அந்த அனைத்து நாட்களிலும் தக்பீர் கூறுவார்கள்.

பைஹகீ 6489

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை

35-A

## ஹஜ்ஜிலிருந்து திரும்பும் போது ஓத வேண்டியது

اللهُ أكبر اللهُ أكبر اللهُ أكبر لا إِلَهَ إِلَّا اللهُ وحدَه لا شَريكَ له، له المُلكُ، وله الحمدُ، وهو على كُلِّ شيءٍ قديرٌ، آيِبونَ تائِبونَ، عابِدونَ ساجِدونَ، لِرَبِّنا حامِدونَ، صَدَقَ اللهُ وعدَه، ونَصَرَ عَبدَه، وهَزَمَ الأحزابَ وحده.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் போர், அல்லது படை, அல்லது ஹஜ், அல்லது உம்ராவிலிருந்து திரும்பும்போது குன்றுகள் அல்லது மேடுகள்மீது ஏறினால், மூன்று முறை தக்பீர் (அல்லாஹு அக்பர்) கூறுவார்கள்.

பிறகு "லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக்க லஹு. லஹுல் முல்க்கு. வ லஹுல் ஹம்து. வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். ஆயிபூன,தாயிபூன, ஆபிதூன, சாஜிதூன, லி ரப்பினா ஹாமிதூன. ஸதகல்லாஹு வஅதஹு, வ நஸர அப்தஹு; வ ஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹ்" என்று கூறுவார்கள்.

புஹாரி 4116

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை 35-B

## ஹஜ்ஜிலிருந்து திரும்பும் போது ஓத வேண்டியது

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையானவர் எவருமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே. புகழும் அவனுக்கே. அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன். பாவமன்னிப்புக் கோரி மீண்டவர்களாகவும், எங்கள் இறைவனை வழிபட்டவர்களாகவும், சிரம் பணிந்தவர்களாகவும் அவனையே போற்றிப் புகழ்ந்தவர்களாகவும் திரும்புகிறோம். அல்லாஹ் தன் வாக்குறுதியை மெய்யாக்கி விட்டான், தன் அடியாருக்கு வெற்றியளித்தான், கூட்டுப் படைகளைத் தன்னந்தனியாக அவனே தோற்கடித்தான்.

புஹாரி 4116

# ஹஜ்ஜில் ஓத வேண்டியவை

நபி(ஸல்) அவர்கள் ஹஜ்ஜில் பிரார்த்தித்த சந்தர்ப்பங்களை கவனத்தில் கொண்டு அந்த சந்தர்ப்பங்களில் அதிகம் பிரார்த்திப்பதும், காலை, மாலை, தொழுகையில், தொழுகைக்குப் பிறகு, இரவில் ஓத வேண்டிய பிரார்த்தனைகளை ஓதி வருவதில் ஒரு ஹாஜி அதிகம் கவனமெடுக்க வேண்டும்.